வேகமாக நிரம்பிவரும் ஆழியாறு அணை

● 100 அடியை கடந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி

● பொள்ளாச்சி

தொடர்ந்து பெய்துவரும் கனமழை காரணமாக ஆழியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதால், 3 நாட்களில் நீர்மட்டம் 12.50 அடி உயர்ந்துள்ளது. நேற்று காலை 101.10 அடியாக நீர்மட்டம் காணப்பட்டது.

ஆனைமலை அருகேயுள்ள ஆழியாறு அணை வாயிலாக கோவை மாவட்டத்தில் புதிய ஆயக்கட்டு மற்றும் பழைய ஆயக்கட்டுகளில் 50,350 ஏக்கர் நிலங்களும், கேரளா மாநிலத்தில் பாலக்காடு மாவட்டத்தில் 20ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன.

ஆழியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான, மேற்கு தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள மேல்ஆழியாறு, நவமலை, காடம்பாறை மற்றும் சர்க்கார்பதி பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. அணைக்கு நீர்வரத்துள்ள பிரதான நவமலை ஆறு, கவியருவி மற்றும் வனப்பகுதியில் உள்ள சிற்றாறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. 120 அடி உயரம் கொண்ட ஆழியாறு அணையில் கடந்த 15-ம் தேதி அணையின் நீர்மட்டம் 88.60 அடியாக இருந்தது. மூன்று நாட்களில் 12.50 அடி அதிகரித்து, நேற்று காலை 8 மணி நிலவரப்படி அணை நீர்மட்டம் 101.10 அடியாக உயர்ந்தது. அணையில் தற்போது 2598.33 மில்லியன் கன அடி நீர் உள்ளது. மேல் ஆழியாறு அணையிலிருந்து 2963 கன அடி, ஊட்டு கால்வாயிலிருந்து 121 கன அடி, அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து 730 கன அடி என மொத்தம் 3814 கன அடி நீர்வரத்து இருந்தது. மழைப்பொழிவு இதே நிலையில் நீடித்தால், ஒரு சில நாட்களில் அணை நிரம்பும் வாய்ப்பு உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.



↑ கனமழை காரணமாக நீர் நிறைந்து காணப்படும் ஆழியாறு அணை.

பொருட்களை காட்டு யானைகள் சேதப்படுத்துவதால்

வால்பாறையில் நடமாடும் ரேஷன் கடைகள் அமைக்க வலியுறுத்தல்

● வால்பாறை

யானைகளிடம் இருந்து அரிசி, பருப்பு, சர்க்கரை உள்ளிட்ட பொருட்களை பாதுகாக்க வால்பாறையில் நடமாடும் ரேஷன் கடைகளை அமைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பொள்ளாச்சி அடுத்த வால்பாறை நகராட்சியில் மொத்தம் உள்ள 21 வார்டுகளில் 47 நியாய விலை கடைகள் செயல்படுகின்றன. இந்த கடைகள் வாயிலாக 16,700 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. மாதம்தோறும் பொது விநியோகத் திட்டத்தில் ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகிறது. வால்பாறை தாலுகா தமிழக- கேரளா எல்லையில் அமைந்துள்ளது. ஒவ்வோர் ஆண்டும் தென்மேற்கு பருவமழை தொடங்கியதும், வனம் பசுமைக்கு திரும்புவதால், கேரளாவிலிருந்து மளுக்குப்பாறை வழியாக வரும் யானைகள் வால்பாறையில் உள்ள தேயிலை தோட்டங்களில் தனித் தனி கூட்டமாக முகாமிடுகின்றன.

பகல் நேரங்களில் தேயிலை தோட்டங்களில் முகாமிடும் யானைகள், இரவு நேரத்தில் இடம் பெயர்ந்து தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்து, வீடு மற்றும் அங்குள்ள கடைகளை சேதப்படுத்தி வருகின்றன. குறிப்பாக தொழிலாளர் குடியிருப்பு பகுதியை ஒட்டியுள்ள ரேஷன் கடைகளை யானைகள் சேதப்படுத்தி, அங்குள்ள பொருட்களை உண்பதால் பொதுமக்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் யானைகள் நடமாடும் பகுதியில் மாதத்தில் ஒரு நாள் மட்டுமே ரேஷன் பொருட்கள் வழங்கப்படுகிறது. ஒரே நேரத்தில் ரேஷன் பொருட்கள் வழங்கப்படுவதால் தொழிலாளர்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழல் ஏற்படுவதுடன், பொருட்களை வாங்க முடியாமல் சிரமத்துக்குள்ளாகின்றனர்.

இதுகுறித்து தேயிலைத் தோட்ட தொழிலாளர்கள் கூறும்போது,“ வால்பாறை தாலுகாவில் யானைகள் நடமாட்டம் உள்ள எஸ்டேட் பகுதிகளில் நடமாடும் ரேஷன் கடை அமைக்க வேண்டும். வாரத்தில் ஒருநாள் வீதம் மாதத்தில் நான்கு நாட்களாவது, எஸ்டேட் பகுதியில் ரேஷன் பொருட்கள் வழங்க வேண்டும்” என்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்படையில் செயல்படுமன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

தமிழ்நாடு அரசு
பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி.நாமக்கல் மாவட்டம்
ந.க.எண்.124/2024.50/2024 ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை நாள்.18.07.2024
கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2024-2025

வ எண்	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை ரூ (ரூபாயில்)	செலுத்த வேண்டிய முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம்	ஒப்பந்ததாரின் தரத்தி	வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்)
1	பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சியில் குடிநீர் திட்ட பணிகள் மேற்கொள்ளுதல	11.77	11.77.000	Class -I	1 ஆண்டு
2	பொத்தனூர் பேரூராட்சியில் வார்டு எண்.1 சுண்டபனை ரோட்டிலிருந்து கிழக்கு செல்லும் சாலை. வார்டு 2 கல்லூரி சாலையிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் சாலை. காமராட்சி நகர் சாலைகள் மற்றும் வார்டு 15 ஆதவன் நகர் சாலைகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்சாலை அமைத்தல் பணிகள் மேற்கொள்ளுதல்	0.99	99.000	Class -I	6 மாதங்கள்

பொத்தனூர் பேரூராட்சியில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover System) கொண்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் 05.08.2024 பிற்பகல் 03.00 மணி வரை இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 05.08.2024 பிற்பகல் 03.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும்.
1. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 05.08.2024 ஆம் தேதி பிற்பகல் 03.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
செயல் அலுவலர்.
செ.ம.தொ.இ / 2423 / ஒப்பந்தப்புள்ளி / 2024 பொத்தனூர் தேர்வுநிலை பேரூராட்சி. நாமக்கல் மாவட்டம்.

மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: மஹிந்தரா டவர்ஸ், P K குர்னி சவ்க், வெர்லி, மும்பை-400 018, மஹாராஷ்ட்ரா, இந்தியா. Tel:+91 22 66523500,
Email id: customercare.mrhfl@mahfin.com, Website – www.mahindrahomefinance.com
பிராந்திய அலுவலகம்: எண்.9/3, முதல் மற்றும் இரண்டாவது தளம், சக்தி எஸ்டேட்ஸ், 3வது தெரு, MG ரோடு, ஆவாரம்பாளையம், கோயம்புத்தூர்-641006.
அசையா சொத்து சுவாதீன அறிவிப்பு
See rule 8(1) of the Security Interest (Enforcement) Rules, 2002
பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச்சட்டம் 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்க) விதிகள் 2002 ன் (Securitisation and Mahindra Rural Housing Finance Limited Assets and Enforcement of Security Interest Act, 2002-ன்கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட M/s.மஹிந்திரா ரூரல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி மூலம், மேற்படி சட்டம் 13(12) பிரிவின் விதி 3-ன்படி கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட தொகையை அதற்கான வட்டி, இதர செலவுகளுடன் அறிவிப்பு பெற்ற அறுபது நாட்களுக்குள் திரும்ப செலுத்த வேண்டுமென்று கீழ் குறிப்பிட்டுள்ள கடன் பெற்றவர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது.
கடன் பெற்றவர்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன்பெற்ற நபருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதியின்படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 13.07.2024 தேதியன்று கீழே கையொப்பமிட்டவர் நிறுவனத்தின் உடைமையாக்கியுள்ளார்.
இது முதற்கொண்டு கடன் பெற்றவர் மற்றும் பொதுமக்களோ இந்த சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக்கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது M/s.மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட், வந்து சேர வேண்டிய கீழே கொடுக்கப்பட்டுள்ள கடன் தொகைக்கும், அதற்கான வட்டி, இதர செலவுகளுக்கும் கட்டுப்பட்டவை என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.
கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13(8) ஷரத்துக்களின் மீது கடன்தாரர்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.
வ.எண்.1: (கோயம்புத்தூர் கிளை) கடன் கணக்கு எண்.XRESCOI00905235; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mrs.A.ஜானகி, Mrs.கவிதா, Mr.A.சுகுமாறன் மற்றும் Mr.R.நிவாந்தகுமார்; கோரிக்கை அறிவிப்பு தேதி: 13.05.2022; கடன் நிலுவைத்தொகை: ₹ 2,19,869/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கோயம்புத்தூர் ஜாயின்ட் I சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட SF எண்.4/1, குறிச்சி கிராமம், மடுக்கரை தாலுகா என்னும் முகவரியில் 24 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: வடக்கு தெற்காக கிழக்கு பக்கம் 3.4 மீட்டர், மேற்கு பக்கம் 3.4 மீட்டர் மற்றும் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 7.2 மீட்டர், தெற்கு பக்கம் 7.2 மீட்டர் ஆகமொத்தம் 24 சதுர மீட்டர். எல்லைகள்: மேற்கு நத்தம் காலி நிலம், கிழக்கு: நத்தம் காலி நிலம் மற்றும் வழிப்பாதை, தெற்கு: நத்தம் காலி நிலம், வடக்கு: நத்தம் காலி நிலம்.
வ.எண்.2: (பொள்ளாச்சி கிளை) கடன் கணக்கு எண்.XRESPOL00998245; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mrs.M.செல்லம்மாள், Mrs.T.செல்வி, Mr.K.மணியன் மற்றும் Mr.A.இளங்கோவன்; கோரிக்கை அறிவிப்பு தேதி: 23.01.2022; கடன் நிலுவைத்தொகை: ₹ 2,78,605.98 மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், கோமங்கலம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட SF எண்.47/2A, எரிசனம்பட்டி கிராமம் என்னும் முகவரியில் 205.41 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: மேற்கு: பழனிசாமி வீடு மற்றும் மற்றொரு நபர் சொத்து, கிழக்கு: கிட்டுசாமி வீடு, தெற்கு: ஆறுசாமி கவுண்டர் மற்றும் குமாரசாமி கவுண்டர் நிலம், வடக்கு: கிழக்கு மேற்கு பொது வழிப்பாதை.
வ.எண்.3: (தாராபுரம் கிளை) கடன் கணக்கு எண்.XRESDHS01041615; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mrs.K.கிட்டம்மாள், Mr.K.கந்தன், Mr.K.பாலுசாமி மற்றும் Mr.L.சிவகுமார்; கோரிக்கை அறிவிப்பு தேதி: 14.02.2023; கடன் நிலுவைத்தொகை: ₹1,18,631/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், புஞ்சை மூலனூர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட SF எண்.1556/B, வெள்ளவாவிபுதூர் கிராமம் என்னும் முகவரியில் 120 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.73, மேற்கு: மனை எண்.75, வடக்கு: மனை எண்.61, தெற்கு: வழிப்பாதை.
வ.எண்.4: (கோயம்புத்தூர் கிளை) கடன் கணக்கு எண்.XRESCOI00947074; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mrs.கன்னியம்மாள், Mr.சக்திவேல், Mr.நாகராஜ் மற்றும் Mr.ஜெயசிதம்பரம்; கோரிக்கை அறிவிப்பு தேதி: 18.05.2022; கடன் நிலுவைத்தொகை: ₹ 2,49,133/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், கிணத்துக்கடவு சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட SF எண்.22/1A, மயிலேரிபாளையம் கிராமம் என்னும் முகவரியில் 60 சதுர மீட்டர் நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: மேற்கு: வழிப்பாதை, கிழக்கு: கிராம எல்லை, தெற்கு: மனை எண்.9, வடக்கு: மனை எண்.1.
வ.எண்.5: (அன்னூர் கிளை) கடன் கணக்கு எண்.XRESARU01111071; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mrs.கருப்பாத்தாள், Mr.ரங்கசாமி, Mr.R.மாரிசாமி, Mr.மயங்கல், Mr.பழனிசாமி மற்றும் Mr.சரவணகுமார்; கோரிக்கை அறிவிப்பு தேதி: 27.12.2022; கடன் நிலுவைத்தொகை: ₹ 1,74,530/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், புஞ்சை புளியம்பட்டி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட SF எண்.517/2, மனை எண்.31, ஆலத்தூர் கிராமம், அவினாசி தாலுகா, கோயம்புத்தூர் மாவட்டம் என்னும் முகவரியில் 2.47 சென்ட் நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.30, மேற்கு: மனை எண்.36, வடக்கு: லே-அவுட் ரோடு, தெற்கு: மனை எண்.36.
வ.எண்.6: (கோயம்புத்தூர் கிளை) கடன் கணக்கு எண்.XRESCOI00962022; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mrs.P.வள்ளி, Mr.P.ரமேஷ், Mr.K.பழனிசாமி மற்றும் Mr.S.முருகன்; கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.01.2022; கடன் நிலுவைத்தொகை: ₹ 1,80,621/-மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சூலூர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட SF எண்.102/1A, 102/1B, பருவை கிராமம், சூலூர் தாலுகா என்னும் முகவரியில் 1313 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.23, மேற்கு: மனை எண்.25, வடக்கு: மனை எண்.32 & 33, தெற்கு: லே-அவுட் ரோடு.
வ.எண்.7: (திருப்பூர் கிளை) கடன் கணக்கு எண்.XRESTUP01041101; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mr.R.சின்னன், Mrs.C.கன்னியம்மாள், Mr.C.கருப்புசாமி மற்றும் Mr.C.ரங்கநாதன்; கோரிக்கை அறிவிப்பு தேதி: 18.05.2022; கடன் நிலுவைத்தொகை: ₹3,44,090/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட SF எண்.506, கணபதிபாளையம் கிராமம், பல்லடம் தாலுகா என்னும் முகவரியில் 1372.5 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.17, மேற்கு: மனை எண்.19, வடக்கு: மனை எண்.15, தெற்கு: தெற்கு வடக்கு 17 அடி கிழக்கு மேற்கு லே-அவுட் ரோடு.
வ.எண்.8: (காங்கேயம் கிளை) கடன் கணக்கு எண்.XRESTUP00986564; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mrs.A.லஷ்மி, Mr.A.நவீன்குமார் மற்றும் Mr.K.மூர்த்தி; கோரிக்கை அறிவிப்பு தேதி: 29.10.2022; கடன் நிலுவைத்தொகை: ₹2,59,253/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், ஊத்துக்குளி சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட SF எண்.232/1, மனை எண்.4, கதங்கன்னி கிராமம் என்னும் முகவரியில் 120 சதுர மீட்டர் நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.5, மேற்கு: மனை எண்.3, வடக்கு: எதிர்காலத்தில் உபயோகிக்கும் நிலம், தெற்கு: வழிப்பாதை.
வ.எண்.9: (காங்கேயம் கிளை) கடன் கணக்கு எண்.XRESKNY00983022; கடன்தாரர்கள் / சக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள்: Mrs.M.சுசிலா, Mr.N.மணியன் மற்றும் Mr.S.சுரேஷ்; கோரிக்கை அறிவிப்பு தேதி: 29.10.2022; கடன் நிலுவைத்தொகை: ₹1,99,285/- மற்றும் வட்டி, இதர செலவுகள்.
அசையா சொத்து விபரம்: திருப்பூர் பதிவு மாவட்டம், காங்கேயம் தற்போது வெள்ளக்கோவில் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட மறு SF எண்.29/A3B, 34/A1, மனை எண்.64, வெள்ளக்கோவில் கிராமம் என்னும் முகவரியில் 80 சதுர மீட்டர் நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: கிழக்கு: மனை எண்.73, மேற்கு: வழிப்பாதை, வடக்கு: மனை எண்.63, தெற்கு: மனை எண்.65.
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி : 13.07.2024 M/s.மஹிந்தரா ரூரல் ஹவுஸிங் பைனான்ஸ் லிமிடெட்

ஆன்லைனில் தொடர்ந்து விண்ணப்பித்து

திருமூர்த்தி அணையில் மண் எடுப்பதற்கான நேரத்தை நீட்டிக்க கோரிக்கை

● உடுமலை

திருமூர்த்தி அணையில் இருந்து மண் எடுப்பதற்கான நேரத்தை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நீட்டிக்க வேண்டும் என தமிழ்நாடு தென்னை விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் சு.பரமசிவம், மாவட்ட ஆட்சியர் தா.கிறிஸ்துராஜ்க்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

திருமூர்த்தி அணையில் இருந்து வண்டல் மண் மற்றும் மண் எடுக்க ஆட்சியர் உத்தரவின் அடிப்படையில், வட்டாட்சியர் மூலம் அனுமதி வழங்கப்பட்டது. திருமூர்த்தி அணையில் புல எண்கள் 261, 262, 263 மற்றும் 264 ஆகியவற்றில் இருந்து 1 லட்சத்து 8 ஆயிரம் கன மீட்டர் வண்டல் மண் மற்றும் மண் எடுக்க அனுமதி வழங்கி அரசிதழில் வெளியிடப்பட்டது. தற்போது புல எண் 264-க்கு மட்டும் விண்ணப்பித்த விவசாயிகள் சிலருக்கு அனுமதி கிடைத்துள்ளது. அந்த பகுதியில் அனுமதித்த அளவு முடிந்துவிட்டதாக தற்போது விவசாயிகள் விண்ணப்பிக்கும்போது பூஜ்ஜியம் (0) எனக் காட்டுகிறது. அதுமட்டுமின்றி புல எண்கள்: 261, 262, 263-க்கும் பூஜ்ஜியம் என்றே காட்டுகிறது.இதன் மீது ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிகள் தொடர்ந்து ஆன்லைன் மூலம் விண்ணப்பித்து மண் எடுக்க உதவ வேண்டும். மழையால் மண் எடுக்க முடியாமல் நாட்கள் கடந்து விட்டதால், இனிமேல் மண் எடுக்கும் நேரத்தை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நீட்டித்து உதவ வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

➡ கோவைப்புதூர் ஆஸ்ரம் பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில், காமராஜர் உருவ வடிவில் 122 மாணவர்கள் அமர்ந்து, பார்வையாளர்களை கவர்ந்தனர்.

ஆஸ்ரம் பள்ளியில் காமராஜர் பிறந்தநாள் விழா

● கோவை

கோவைப்புதூர் ஆஸ்ரம் பள்ளியில் நடைபெற்ற காமராஜர் பிறந்த நாள் விழாவில், 122 சிறுவர், சிறுமிகள் காமராஜரின் உருவ வடிவில் அமர்ந்து பார்வையாளர்களை கவர்ந்தனர்.

கோவைப்புதூர் ஆஸ்ரம் மெட்ரிக் பள்ளியில் முன்னாள் முதல்வர் காமராஜரின் 122- வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இதில் ஒன்றாம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 122 சிறுவர், சிறுமிகள், காமராஜரின் உருவ வடிவம்போல அமர்ந்திருந்தனர்.

சிறுவர்களுக்கு போட்டியாக, சிறுமிகளும் வெள்ளைச் சட்டை, வேஷ்டி, தோளில் துண்டு, வெள்ளை மீசையுடன் தத்ரூபமாக காமராஜர் போல வேடமிட்டு இருந்தனர். அனைவரும் கல்வி உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஆஸ்ரம் பள்ளி தாளாளர் தேவேந்திரன், கவுரி, நிர்வாகி உதயேந்திரன், செயலாளர் ரவிக்குமார், வித்யாஸ்ரம் மழலையர் பள்ளி நிர்வாக இயக்குநர் சவுந்தர்யா, பள்ளி முதல்வர் சரண்யா உட்பட ஆசிரிய, ஆசிரியைகள் பலர் கலந்து கொண்டனர்.

VISTAAR FINANCE
விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம்: மனை எண். 59 & 60- 23, 22வது குறுக்கு, 29வது பிரதான, BTM லேஅவுட் ஸ்டேஜ் 2, பெங்களூரு-560076. www.vistaarfinance.com
கோரிக்கை அறிவிப்பு
2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்க சட்டம் பிரிவு 13(2)ன் கீழ் அறிவிப்பு
விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட் (VFSPL) அறிவிப்பு வழங்குவதாவது, பின்வரும் கடன்தாரர்கள் விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்-லிருந்து சொத்திற்கு எதிராக கடன் பெற்றுள்ளார்கள் மற்றும் தங்கள் கடனின் சமமான மாதாந்திர தவணைகளை (EMIs) செலுத்தத் தவறிவிட்டனர், ஆகையால் இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டு-தலின்படி அதன் கடன் கணக்கு செயல்படாத சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடன்தாரர்கள் அசையா சொத்தினை அடமானம் கடனுக்காக வைத்துள்ளனர், அவற்றின் விவரங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன. கடனின் விவரங்கள் மற்றும் கடன்தாரர்கள் விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை மற்றும் தேதியின்படி செலுத்த வேண்டிய தொகைகளும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொது மக்களுக்கு பொதுவாகவும் அறிவிப்பதாவது யாதெனில், விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெடின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர், அடமான கடன்தாரர் பின்வரும் கடன்தாரர்களுக்கு எதிராக நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் புனரமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி சட்டம் 2002 (the SARFAESI Act) அமலாக்கத்தின்படி செயல்படுவார். இந்த அறிவிப்பின் 60 (அறுபது) நாட்களுக்குள் பின்வரும் கடன்தாரர்(கள்) தங்கள் பெயர்-களுக்கு எதிராக உள்ள நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தத் தவறினால், கீழே கையொப்பமிட்டுள்ளவர் SARFAESI சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (4)-ன் கீழ் பாதுகாக்கப்பட்ட கடனாளருக்கு வழங்கப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவார்கள், சொத்தினை கைப்பற்றுவதற்கான அதிகாரம் உட்பட. கீழே குறிப்பிட்டுள்ள சொத்துகளுடன் ஒப்பந்தம் செய்யக்கூடாது என்று பொது மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

வ. எண்	கணக்கு எண்	கடன்தாரர்கள் மற்றும் இணை-கடன்தாரர்கள் பெயர்	மொத்த நிலுவை தொகை	மொத்த நிலுவை தொகை தேதி
1	0025SBML02387	1. Mr./Mrs. வைரபிரகாஷ் J. 2. Mr./Mrs. ஃபரிதாபேகம் V.	ரூ. 20,76,795.68	02-07-2024
	அட்டவணை-A: (அடமான சொத்தின் விபரம்) : அசையா சொத்தின் அனைத்து துண்டுகளும் மற்றும் பகுதிகளும், திருப்பூர் பதிவு மாவட்டம், உடுமலைபேட்டை சார்-பதிவு மாவட்டம், உடுமலைபேட்டை தாலுகா, உடுமலைபேட்டை நகராட்சி, தங்கம்மாள் ஓடை, அத்துடன் மேற்கு நிலம் மற்றும் கட்டிடம் பின்வரும் எல்லைகள் : கிழக்கில் : தெற்கு-வடக்கு சாலை, மேற்கில் : தெற்கு-வடக்கு தங்கம்மாள் ஓடை, தெற்கில் : நகராட்சி தொடக்கநிலை பள்ளி, வடக்கில் : கிழக்கு-மேற்கு சாலை. மேற்கூறப்பட்ட நிலம் வடக்கு கிழக்கு-மேற்கு மீட்டர் முதல் மேற்கு பக்கம் நேராக நோக்கி கிழக்கு 6.8 குறுக்கே போகும் தெற்கு-கிழக்கு மீட்டர் 4.6 நோக்கிய தெற்கு பக்கம் கிழக்கு-மேற்கு மீட்டர் 12.7 வடக்கு பக்கம் தெற்கு-வடக்கு ம